**சென்னை-69, குன்றத்தூர், திருப்பெரும்புதூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர். முனைவர். சி.கலைமகள், எம்.ஏ, எம்ஃபில்., பி.எச்டி.,**

---

**ந.க.எண்.68/அ/2024 நாள். 26.03.2024**

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – சென்னை-69, திருப்பெரும்புதூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - திரு. இரா. ஹரிபிரசாத், , இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர் – பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 24087/பி2/2021 நாள். 31.08.2021
2. சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 026060/அ4/2021 நாள். 31.08.2021
3. தனியரின் 01.09.2021 நாளிட்ட பணிசேர் கடிதம்.
4. அரசாணை நிலை எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை நாள் 08.03.2023
5. அரசு உயர்கல்வி (G2)த் துறை efile கடித எண். 1535/ஜி2/2023–1 நாள். 30.10.2023
6. சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2324/பி3/2023–17, நாள். 06.04.2023
7. சென்னை–15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 1058/பி1/2023 நாள். 23.01.2024

••••••

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி சென்னை மண்டலம், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி பணியிலிருக்கும் காலத்தில் இயற்கையெய்திய திருமதி. க. பூங்கோதை என்பவரின் மகன் திரு. இரா. ஹரிபிரசாத் என்பார் கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு 01.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். பார்வை (6)ல் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி அன்னார் இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராக நிர்வாக இடப்பெயர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து 12.04.2023 முற்பகல் முதல் இக்கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது திரு. இரா. ஹரிபிரசாத் என்பார் இளநிலை உதவியாளராக இக்கல்லூரியில் பணிபுரிந்து வருவதால் பார்வை–(7)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், தனியர் பணியில் சேர்ந்து ஓராண்டு முடிவடைந்த நிலையில் அன்னாரது பணியினை வரன்முறை செய்வதற்கு ஏதுவாக பார்வை–(5)ல் காணும் அரசு கடிதம் மற்றும் பார்வை–(4)ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட, தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் 2023–ன் விதி 16ன்படி, கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் பணிபுரியும் இட அளவிலேயே **துறைத் தலைவர் அவர்களே** பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி–10ன் படி இளநிலை உதவியாளர், தட்டச்சர் பதவிக்கு நியமன அலுவலர் சார்ந்த இணை இயக்குநர்/கல்லூரி முதல்வரே ஆவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பிறந்த தேதி 26.01.1994 என்றும் பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை. எனவே, திரு. இரா. ஹரிபிரசாத் என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த 01.09.2021 **முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை** செய்து ஆணையிடப்படுகிறது.

26/3/2024

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருப்பெரும்புதூர், குன்றத்தூர், சென்னை-69.
காஞ்சிபுரம் மாவட்டம்.

26-3-24

பெறுநர்

திரு. இரா. ஹரிபிரசாத்,
இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருப்பெரும்புதூர், சென்னை-69.

நகல்

1. கல்லூரிக் கல்வி இயக்குநர்
   கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம்,
   சைதாப்பேட்டை, சென்னை-15. - தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
   கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்,
   வேலூர் மண்டலம், வேலூர். - தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.